DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -18

| | | |
|---|---|---|
| Name | : திரு. சேகர் | Caste: |
| Father's Name: | திரு. மாணிக்கம் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 11th day of September -2023

**A1 and A3 to A6 Present.**

**11.09.2023.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் வட்டம் நிலவாரப்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 26.11.2014 அன்று நான் சேலம் டவுன் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். அன்று காலை 11.00 மணி அளவில் நானும் எனது கிராம உதவியாளர் பழனிமுத்து என்பவரும் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது ஆட்டையாம் பட்டி காவல்ஆய்வாளர் ஒரு காவலர் மூலம் எனக்கு ஒரு கடிதம் கொடுத்து அனுப்பினார். அதில் ஆட்டையாம்பட்டி காவல்நிலைய குற்ற வழக்கில் சம்மந்தப்பட்ட கிச்சிப்பாளைம் அறிஞர் அண்ணா தெருவை சேர்ந்த கிருபாகரன் என்பவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி வழக்கின் தடயங்களை கைப்பற்ற வேண்டி இருப்பதால் கிச்சிப்பாளைம் முகமது ஹாஜி என்பவரது யுனுஸ் ஆட்டோ ஒர்க்ஸ் என்ற கடைக்கு வருமாறு சொல்லப்பட்டிருந்தது.

அதன்பேரில் நானும், பழனிமுத்துவும் காலை 11.30 மணிக்கு மேற்கண்ட

கடைக்கு சென்றோம். அங்கு வழக்கின் எதிரி கிருபாகரன் மற்றும் ஆட்டையாம்பட்டி காவல் ஆய்வாளர் அவர்களது காவலர்களுடன் இருந்தார்கள். ஆஜர் எதிரிகளில் எதிரி கிருபாகரன் என்பவர் இல்லை. எங்கள் முன்னிலையில் கருப்பு நிற unicorn வாகனத்தை கிருபாகரன் எடுத்து ஆஜர் செய்தார். அதனை காவல் ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும், எனது உதவியாளர் பழனிமுத்துவும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம்.

அந்த கைப்பற்றுதல் மகஜர் என்னிடம் காட்டப்படுவது தான் அதில் நான் முதல் சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.18. கைப்பற்றப்பட்ட வாகனத்தின் பதிவு எண் எனக்கு நினைவில்லை. அந்த வாகனம் என்னிடம் தற்போது காட்டப்படும் புகைப்படங்களில் உள்ளது தான். அந்த புகைப்படங்கள் அ.சா.ஆ.19 வரிசை. ( அந்த வாகனம் இன்று நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டிருப்பதாகவும், நீதிமன்றத்தின் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அறிவார்ந்த அரசு தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது).

பின்னர் 12.30 மணிக்கு Honda Activa என்ற இருசக்கர வாகனத்தையும் அதே கடையில் இருந்து எடுத்து கிருபாகரன் ஆஜர் செய்தார். அதனை காவல் ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும், எனது உதவியாளர் பழனிமுத்துவும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம்.

அந்த கைப்பற்றுதல் மகஜர் என்னிடம் காட்டப்படுவது தான். அதில் நான் முதல் சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.20. கைப்பற்றப்பட்ட வாகனத்தின் பதிவு எண் எனக்கு நினைவில்லை. அந்த வாகனம் என்னிடம் தற்போது காட்டப்படும் புகைப்படங்களில் உள்ளது தான். அந்த புகைப்படங்கள் அ.சா.ஆ.21 வரிசை. ( அந்த வாகனம் இன்று நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டிருப்பதாகவும், நீதிமன்றத்தின் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அறிவார்ந்த அரசு தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது).

பின்னர் 1.30 மணிக்கு வழக்கின் எதிரியான கிருபாகரன் என்பவரது அறிஞர் அண்ணா தெருவில் உள்ள வீட்டிலிருந்து கருப்பு வெள்ளை கட்டம் போட்ட முழுகை சட்டை ஒன்றையும், புளு கலர் ஜீன்ஸ் பேண்ட் ஒன்றையும் எதிரி கிருபாகரன் எடுத்து ஆஜர் செய்தார். அந்த உடைகளை தான் சம்பவத்தின்போது அணிந்திருந்ததாக சொன்னார். அந்த உடைகளை ஆய்வாளர் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார்.

அந்த மகஜரில் நானும், எனது உதவியாளர் பழனிமுத்துவும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் என்னிடம் காட்டப்படுவது தான். அதில் நான் முதல் சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.22. ஆய்வாளரால் கைப்பற்றப்பட்ட மேற்படி சட்டை மற்றும் ஜீன்ஸ் பேண்ட் ஆகியவை என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படுபவைதான். சட்டை அ.சா.பொ.13. ஜீன்ஸ் பேண்ட் அ.சா.பொ.14.

காவல் ஆய்வாளரர் என்னை இது சம்மந்தமாக என்னை விசாரிக்க நான் நடந்ததை சொன்னேன்.

பின்னர் 29.11.2014 அன்று காலை 8.30 மணிக்கு நானும் எனது கிராம உதவியாளர் ரவி என்பவரும் அலுவலகத்தில் பணியில் இருந்த போது ஆட்டையாம்பட்டி காவல்ஆய்வாளர் தனது காவல்நிலைய போலிசார் ஒருவர் மூலம் எனக்கு ஒரு கடிதம் கொடுத்து அனுப்பினார். அந்த கடிதத்தில் குகை நேரு நகர் Housing Board பகுதியை சேர்ந்த ஆனந்தன் என்பவரை சங்கீத் தியேட்டர் அருகே வைத்து அன்று காலை 8.00 மணியளவில் கைது செய்து போனதாகவும், அவரை விசாரிக்க வேண்டி இருப்பதால் சாட்சியாக வரும் படியும் சொல்லப்பட்டிருந்தது.

அதன்பேரில் நானும், ரவியும் காலை 9.00 மணியளவில் சங்கீத் தியேட்டர் அருகே சென்றோம். அங்கு ஆட்டையாம்பட்டி காவல் நிலைய ஆய்வாளர், போலிசார் மற்றும் எதிரி ஆனந்தன் என்பவருடன் நின்று கொண்டிருந்தார். எதிரி ஆனந்தன் என்பவர் நீதிமன்றத்தில் ஆஜரில் இருக்கிறாரா என்று தெரியவில்லை. ஏனென்றால் அவரை நான் பார்த்து 10 வருடங்கள் ஆகிவிட்டதால் அவரது முகம் நினைவில் இல்லை. எங்கள் முன்னிலையில் எதிரி ஆனந்தன் எவ்வித துன்புறுத்தலும் இன்றி தானாக

முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தில் நானும் ரவியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் எதிரி ஆனந்தன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவது சாட்சியாக நான் கையொப்பம் செய்திருக்கிறேன். என்னுடைய கையொப்பம் அ.சா.ஆ.23.

இரண்டாவது சாட்சியாக ரவி செய்திருக்கிறார். எதிரி ஆனந்தன் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தின் படி பிற்பகல் 12.00 மணிக்கு குகை நேரு நகரிலுள்ள எதிரி ஆனந்தனின் வீட்டிலிருந்து சாம்சங் செல்போன் ஒன்றையும், காக்கி நிற அரை கை சட்டை ஒன்றையும், காக்கி நிற பேண்ட் ஒன்றையும் எடுத்து ஆனந்தன் ஆஜர் செய்தார். அந்த சொத்துக்களை காவல் ஆய்வாளர் மகஜர் தயாரித்து கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும் , ரவியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் என்னிடம் காட்டப்படுவது தான் அதில் நான் முதலவாது சாட்சியாகவும், ரவி இரண்டாவது சாட்சியாகவும் கையொப்பம் செய்திருக்கிறோம். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.24.

மேற்படி செல்போன்(கவருடன் கூடியது ), காக்கி நிற சட்டை மற்றும் பேண்ட் ஆகியவை முறையே அ.சா.பொ.15 முதல் அ.சா.பொ.17 வரை. பின்னர் பிற்பகல் 2.00 மணியளவில் ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி சொன்னபடி குகை புலிகுத்தி தெரு எண்.4 –ல் உள்ள குமார் என்பவரிடம் கடனாக பெற்ற ரூ.12,000/–த்தை திரும்ப கொடுத்த இடத்தை அடையாளம் காட்டி அந்த குமார் என்வரிடம் இருந்து அந்த பணத்தை பெற்று கொடுத்தார். அந்ததொகை ரூ.12,000/– காவல் ஆய்வாளர் மஜர் தயார் செய்து கைப்பற்றினார்.

அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், ரவியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் என்னிடம் காட்டப்படுவது தான். முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.25. கைப்பற்றப்பட்ட தொகை ரூ.12,000/– அ.சா.பொ.18 வரிசை. பின்னர் அன்று மாலை 4.30 மணிக்கு சன்னியாசிகுண்டு மெயின் ரோடு பெஸ்ட் மெடிக்கல் ஷாப் அருகில் செந்தில்நாதன் என்பவரிடம் Hero Honda வாகனத்தை அடகு வைத்து கடனாக பெற்ற

ரூ.10,000/—த்தை திரும்ப கொடுத்த இடத்தை அடையாளம் காட்டி எதிரி அந்த ரூ.10,000/— தொகையை செந்தில்நாதனிடமிருந்து திரும்ப பெற்றுக்கொடுத்தார்.

அந்ததொகை ரூ.10,000/—த்தை காவல் ஆய்வாளர் மஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், ரவியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் என்னிடம் காட்டப்படுவது தான். முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.26. கைப்பற்றப்பட்ட தொகை ரூ.10,000/— அ.சா.பொ.19 வரிசை. அவை ரூ.500 நோட்டுக்கள் ஆகும்.

பின்னர் அன்று மாலை 6.30 மணியளவில் அரியானூரிலிருந்து ஒட்டமரக்காடு செல்லும் வழியில் பேக்காடு பழனிசாமி என்பவரது தென்னந்தோப்பில் சம்பவ இடத்தை எதிரி ஆனந்தன் ஆய்வாளருக்கு அடையாளம் காண்பித்தார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

பின்னர் 03.12.2014 அன்று காலை 8.30 மணிக்கு நானும் எனது கிராம உதவியாளர் பழனிமுத்து என்பவரும் அலுவலகத்தில் பணியில் இருந்த போது ஆட்டையாம்பட்டி காவல்ஆய்வாளர் தனது காவல்நிலைய போலிசார் ஒருவர் மூலம் எனக்கு ஒரு கடிதம் கொடுத்து அனுப்பினார். அந்த கடிதத்தில் கிச்சிப்பாளைம் அறிஞர் அண்ணா தெருவை சேர்ந்த மேகநாதன் என்பவரும், பொன்னம்மாப்பேட்டை புதுத்தெருவை சேர்ந்த சந்தோஷ்குமார் என்பவரும் தங்கள் காவல்நிலைய குற்றவழக்கை ஒப்புக்கொண்டு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி வழக்கின் தடயங்களை கைப்பற்ற வேண்டியுள்ளதால் மேற்படி எதிரிகளின் வீட்டிற்கு வரும்படி சொல்லப்பட்டிருந்தது.

அதன் பேரில் நானும், பழனிமுத்தும் கிச்சிப்பாளையம் அறிஞர் அண்ணா தெருவிலுள்ள எதிரி மேகநாதன் என்பவரது வீட்டிற்கு சென்றோம். அங்கு மேகநாதன் என்பர் அவரது வீட்டிலிருந்து ஒரு முழுக்கை சட்டை ஒன்றை (கருப்பு கலர், வெள்ளை ரோஸ் கோடு போட்டது ) எடுத்து ஆஜர் செய்தார். அந்த சட்டையை எதிரி கிருபாகரன் அவருக்கு வாங்கி கொடுத்ததாக சொன்னார். அந்த சட்டையை ஆய்வாளர்

கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், பழனிமுத்துவும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். நான் முதலாவது சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.27. அந்த சட்டை அ.சா.பொ.20.

பின்னர் பிற்பகல் 12.00 மணியவில் பொன்னம்மாப்பேட்டை புதுத்தெருவை சேர்ந்த எதிரி சந்தோஷ்குமார் என்பவர் அவரது வீட்டில் இருந்து ஸ்டார்சிட்டி இருக்கர வாகனத்தையும், ஒரு புளூ கலர் ஜீன்ஸ் பேண்ட் ஒன்றையும் எடுத்து ஆஜர் படுத்தினார். அந்த சொத்துக்களை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், பழனிமுத்துவும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். நான் முதலாவது சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.28. அந்த ஜீன்ஸ் பேண்ட் அ.சா.பொ.21.

கைப்பற்றப்பட்ட வாகனத்தின் பதிவு எண் எனக்கு நினைவில்லை. அந்த வாகனம் என்னிடம் தற்போது காட்டப்படும் புகைப்படங்களில் உள்ளது தான். அந்த புகைப்படங்கள் அ.சா.ஆ.29 வரிசை. ( அந்த வாகனம் இன்று நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டிருப்பதாகவும், நீதிமன்றத்தின் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அறிவார்ந்த அரசு தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது). இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க நான் நடந்ததை சொன்னேன். எதிரிகள் சந்தோஷ்குமார் மற்றும் மேகநாதன் ஆகியோர்களை எனக்கு தற்சமயம் நினைவில்லை.

**1 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**6 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காவல் ஆய்வாளர் எனக்கு அனுப்பியதாக சொல்லும் 3 கடிதங்களை எனது உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து அவரது எழுத்துபூர்வமான அனுமதி பெற்று ஆய்வாளருக்கு உதவியாக செல்லவில்லை என்றால் நான் அவருக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்து சென்றேன். வாய்மொழியாக தகவல் சொல்லிவிட்டு சென்றதாக வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் வெளியே

செல்வதாக இருந்தால் அதுதொடர்பாக எனது அலுவலகத்திலுள்ள Notice Board ல் எழுதி வைத்துவிட்டு தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். பணிநகர் பதிவேட்டிலும் குறிப்பிடவேண்டும் என்றால் பணிநகர்பதிவேடு தற்போது பராமரிக்கப்படுவதில்லை. 29.11.2014 அன்றைய தினம் நான் காவல் ஆய்வாளருக்கு உதவியாக சாட்சியாக செல்லவில்லை என்பதால் தான் என்னால் பராமரிக்கப்படவேண்டிய முக்கியமான பதிவேடுகள் எதிலும் நான் குறிப்புகள் எழுதவில்லை என்றால் சரியல்ல.

சங்கீத் தியேட்டர் பகுதியான பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். ஏற்கனவே 6 ஆம் எதிரி போலிசாரால் கைது செய்து வைக்கப்பட்டிருந்ததை நியாயப்படுத்தவேண்டி சங்கீத் தியேட்டர் முன்பாக அவர் என் முன்னிலையில் கைது செய்யப்பட்டதாக ஜோடனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் முன்பாக எதிரி ஆனந்தன் ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எதிரி ஆனந்தன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் சொல்ல ஒரு காவலர் எழுதினார். ஆனந்தன் சம்மந்தப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் ஆவணங்களை மற்றொரு காவல் எழுதினார்.

பிற்பகல் 12.00 மணிக்கு எதிரி ஆனந்ததின் வீட்டிற்கு சென்றததாக சொல்லும் சமயத்தில் வீட்டிலிருந்த நபர்களை ஆய்வாளர் விசாரித்து எழுதிக்கொண்டார். நான் வீட்டின் உள்ளே சென்றேன். அந்த சமயத்தில் கைப்பற்றப்பட்ட உடைகள் மற்றும் செல்போன் ஆகியவற்றை ஆய்வாளர் என் முன்பாக பேக்செய்து சீல் வைத்தாரா என்றால் இல்லை. மேற்கண்ட சொத்துக்களை வீட்டின் எந்த இடத்திலிருந்து எதிரி எடுத்துக்கொடுத்தார் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

மேற்கண்ட சொத்துக்கள் சாதாரணமாக மார்கெட்டில் கிடைக்ககூடியவை என்றால் சரிதான். எதிரி ஆனந்தன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றுதல் மகஜர்கள் தயார் செய்து அதன் அடிப்படையில் சான்று

பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக நான் சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது மேற்படி வழக்கு சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எதிரி அழைத்து சென்று அடையாளம் காட்டியதின் பேரில் குமார் என்பவரிடம் இருந்து ரூ.12,000/–மும், செந்தில் நாதன் என்பவரிடமிருந்து ரூ.10,000/–மும் மகஜர்கள் தயார் செய்து கைப்பற்றப்பட்டதாக நான் சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

எதிரி சம்பவ இடத்தை அடையாளம் காட்டியதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் தயார் செய்து வைக்கப்பட்டிருந்த ஆவணங்களில் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்து கொடுத்து விட்டு தற்போது அதற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் நான் சொன்ன இடங்களுக்கு போகவில்லை என்றாலும், என் முன்பாக எந்த வழக்கு சொத்துக்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

**3 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாதகாப்பட்டியில் குடியிருக்கிறேன். சேலம் டவுனில் பிள்ளையார் கோவில் தெரு எண்.4 என்ற முகவரியில் டவுன் VAO அலுவலகம் உள்ளது. மேற்படி அலுவலகத்திற்கும், ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்திற்கும் இடையே சுமார் 20 கி.மீ தொலைவு இருக்கும். 03.12.2014 அன்று காலை 8.30 மணிக்கு நான் எனது அலுவலகத்திற்கு வந்தேன். நான் அங்கு சென்றபோது எனது உதவியாளர் அங்கு இருந்தார்.

காலை 9.00 மணி முதல் பிற்பகல் 12.00 மணிவரை கிராமநிர்வாக அலுவலர் அலுவலகத்தை விட்டு வெளியே போககூடாது என்று அரசாணை உள்ளது என்றால் சரிதான். அவசரபணி நிமித்தம் வெளியே போகலாம் என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார். மாவட்ட ஆட்சியாளரோ அல்லது மாவட்ட வருவாய்அலுவலரோ அழைத்தால் மட்டும் தான் அந்த நேரத்தில் வெளியே செல்லவேண்டும் என்றும் அதுவும் எழுதிவைத்து விட்டு தான் போகவேண்டும் என்றும் அந்த அரசாணையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மேற்படி கடிதங்களை ஆட்டையாம்பட்டி காவல்நிலைய தலைமைகாவலர் ஒருவர் மூலம் ஆய்வாளர் எனக்கு கொடுத்து அனுப்பினார். அந்த தலைமை காவலரின் பெயர் எனக்கு நினைவில்லை. அந்த கடிங்களை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரி மேகநாதன் வீடு எங்களுக்கு எப்படி தெரியும் என்றால் விசாரித்து போனோம். மேகநாதன் த.பெ. எனக்கு தெரியாது. அந்த வீடு சொந்த வீடா அல்லது வாடகை வீடா என்று தெரியாது. மேகநாதன் வீடு தார்சு வீடாகும்.

மேற்படி வீட்டின் வாசல் எந்த பக்கம் பார்த்து இருந்தது என்று நினைவில்லை. அந்த வீட்டில் எத்தனை அறைகள் இருந்தது என்றும், அந்த வீட்டில் எத்தனை பேர் குடியிருந்தார்கள் என்றும் நினைவில்லை. நான் மேகநாதன் வீட்டிற்கு சென்றபோது அங்கு ஆய்வாளர் உள்ளிட்ட 5 பேர் இருந்தார்கள். அவர்கள் போலிஸ் வாகனத்தில் வந்திருந்தார்கள். அது என்ன வாகனம் என்று நினைவில்லை. நாங்கள் மேகநாதன் வீட்டிற்கு காலை 9.00 மணிக்கு சென்றோம். நாங்கள் அங்கு சென்றதிற்கு பிறகு தான் மேகநாதன் சட்டையை எடுத்துக்கொடுத்தார். வீட்டிற்குள் இருந்து எடுத்துக்கொடுத்தார். வீட்டிற்குள் எந்த இடத்திலிருந்து எடுத்துக்கொடுத்தார் என்று நினைவில்லை.

மேகநாதன் வீட்டிற்கு அருகே குடியிருப்பு வீடுகள் இருக்கிறது. மகஜரை ஒரு போலிசார் எழுதினார். அவரது பெயர் நினைவில்லை. அந்த மகஜர் வீட்டின் வெளியே போலிஸ் வாகனத்தின் மீது வைத்து எழுதப்பட்டது. அந்த வாகனத்தின் பதிவு எண் நினைவில்லை. அந்த மகஜர் எழுதுவதற்கு சுமார் ஒருமணி நேரம் ஆனது. அதன்பின்னர் பொன்னம்மாப்பேட்டையிலுள்ள எதிரி சந்தோஷ் வீட்டிற்கு சென்றோம். நான் எனது இருசக்கர வாகனத்தில் சென்றேன். போலிசார் ஜீப்பில் வந்தார்கள்.

எதிரி மேகநாதன் வீட்டிற்கும், சந்தோஷ்குமார் வீட்டிற்கும் இடையே 2 கி.மீ தொலைவு இருக்கும். சந்தோஷ்குமார் வீடும் தார்சு வீடாகும். அந்த வீட்டின் வாசல் எந்த திசையை நோக்கி இருக்கிறது என்றும், அதில் எத்தனை அறைகள் இருக்கிறது என்றும் நினைவில்லை. அந்த வீட்டில் எத்தனை பேர் குடியிருக்கிறார்கள் என்று

எனக்கு தெரியாது. எதிரி சந்தோஷ்குமார் பேண்ட் ஒன்றை அவரது வீட்டில் எந்த அறையில் இருந்து எடுத்துக்கொடுத்தார் என்று நினைவில்லை. கைப்பற்றப்பட்ட ஸ்டார்சிட்டி வாகனம் வீட்டின் முன்புறம் உள்ள வராண்டாவில் நின்று கொண்டிருந்தது. அந்த வாகனம் பூட்டப்பட்டு நிறுத்தப்பட்டு இருந்ததாக என்று நினைவில்லை. அந்த வாகனத்திற்குரிய இன்சூரன்ஸ், ஆர்.சி, டிரைவிங் லைசன்ஸ் ஆகியவை கைப்பற்றப்பட்டதா என்று நான் பார்க்கவில்லை.

அந்த வாகனம் ஓடக்கூடிய நிலையில் தான் இருந்தது. சந்தோஷ்குமார் வீட்டில் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் சம்மந்தமான மகஜர்கள் ஒரு போலிசால் எழுதப்பட்டது. அவரது பெயர் தெரியாது. சந்தோஷ்குமார் வீட்டின் அருகே நிறை கடைகளும், குடியிருப்பு வீடுகள் இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி மகஜர்களில் நான் முதலில் கையொப்பம் செய்தேன். அதன்பின்னிட்டு ஆய்வாளர் கையொப்பம் செய்து சீல் வைத்தார். அந்த வாகனத்தை ஒரு போலிசார் ஓட்டி சென்றார். வாகனத்திற்குரிய சாவி யாரிடம் இருந்தது என்று தெரியவில்லை.

நான் அதன்பின்னிட்டு காவல்நிலையம் சென்றேனா என்றால் நான் ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்திற்கு போகவில்லை. பின்னிட்டு எப்போதும் நான் அந்த காவல்நிலையத்திற்கு போகவில்லை. ஆய்வாளர் எத்தனை நாட்கள் கழித்து என்னை விசாரித்தார் என்றால் 03.12.2014 அன்றே விசாரித்தார். நான் சொன்ன சங்கதிகளை ஒரு போலிசார் எழுதினார். அவரது பெயர் எனக்கு தெரியாது. அனைவரும் சீருடையில் தான் இருந்தார்கள்.

03.12.2014 அன்று எதிரிகள் மேகநாதன் மற்றும் சந்தோஷ்குமார் ஆகியோர் அவர்களது வீடுகளிலிருந்து வழக்கு சொத்துக்களை எடுத்துக்கொடுத்ததாகவும், அந்த சொத்துக்களை ஆய்வாளர் எங்கள் முன்பு மகஜர் தயாரித்து கைப்பற்றியதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், எதிரிகள் எந்த வழக்கு சொத்துக்களையும் எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றாலும், எந்த வழக்கு சொத்துக்களும் நான் சொன்னது போல் ஆய்வாளரால் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

நான் ஒரு அரசு ஊழியர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு அதற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem.